**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 4 of 2024

Depositions of PW -6 witness for ________ Prosecution / Defence / Court

Name : டாக்டர் திரு. கே. கோபி

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of September** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்போது பல்லடம் அரசு மருத்துவமனையில் உதவி அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.06.2023ம் தேதி மதியம் 02.20 மணியளவில் பல்லடம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவல் இருந்தபோது சுப்பால், வயது 80, என்பவரை அவரது மகன் பெருமாள் என்பவரால் அழைத்து வரப்பட்டார்.

2. அவர் என்னிடம் 13.06.2023ம் தேதி காலை 08.30 மணியளவில் தெரிந்த நபர் கையால் நல்லூர் பாளையம் டீ கடை முன்பு தாக்கியதாக தெரிவித்தார். அவரது வலது கையில் தாக்கிவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும் அவரது கையில் வலியிருப்பதாகவும் வீக்கமும் காணப்பட்டது. மேற்படி காயம் தவிர்த்து வெளிப்புற காயங்கள் இல்லை. அவரை உள்நோயாளியாக மருத்துவ சிகிச்சைக்கு அனுமதித்து நுண்கதிர் படம் எடுத்து

பார்க்கப்பட்டதில் அவரது மணிக்கட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு காணப்பட்டது.

3. 19.06.2023 ம் தேதி மருத்துவமனையிலிருந்து அவரை விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என எனது மருத்துவ கருத்துறையை வழங்கினேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.2** மற்றும் காயச்சான்று **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் சிகிச்சை அளித்த நபரின் வயது நான் சிகிச்சை அளித்த போது 80 என்றால் சரிதான். வயதின் காரணமாக ஒருவர் நிலை தடுமாறி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் போலீசார் என்னை விசாரித்தபோது நுண்கதிர்படம் எடுத்ததை நான் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

1. மேற்படி நான் சிகிச்சை அளித்த நபரின் ஒருவர் கையை முறுக்கினால் மேற்சொன்ன காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.25 19:56:26 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**